மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி

வெற்றிடங்கள்

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தரப்பட்ட பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொது முகாமையாளர் – பதவி 01

i. பதவியின் பெயர் – பொது முகாமையாளர்

ii. சேவை தரம் – சிரேஷ்ட முகாமையாளர் (HM 2–1)

iii. சம்பள அளவு – முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைய,
HM 2-1 2025 – 161,140 – 12 x 4,850 – 219,340/-

iv. அடிப்படைச் சம்பளம் - ரூபா 161,140/- அடிப்படைச் சம்பளம் கிடைப்பது 2027.01.01 ஆம் திகதி தொடக்கமாகும். ஆட்சேர்ப்பின் அரம்பச் சம்பளப் படி முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 கொண்ட சுற்றுநிருபத்தின் அட்டவணை IIஇ இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 140,317/- ஆகும். செலுத்தப்படாத சம்பளம் ரூபா 230,823/- ஆகும்.

v. தகைமை

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பொறியியல் துறைக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்தை பெற்றிருத்தல்

அத்துடன்

இலங்கை பொறியியல் சபையின் பட்டய சிவில் பொறியியலாளர் ஒருவராக பதிவு செய்திருத்தல்

மற்றும்

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தின் பதவிகளில் குறைந்தது பதினெட்டு (18) ஆண்டுகள் அனுபவம் (குறைந்தது இதில் 10 ஆண்டுகளேனும் வீதித் துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.)

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

சிவில் பொறியியல் துறைக்கு தொடர்புடைய கலாநிதிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

இலங்கை பொறியியல் சபையின் பட்டய சிவில் பொறியியலாளர் ஒருவராக பதிவு செய்திருத்தல்

மற்றும்

கலாநிதிப் பட்டம் ஒன்றைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் முழுமையான சேவைக் காலம் பதினைந்து (15) ஆண்டுகள் அந்த சேவைக் காலத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது வீதித் துறையில் ஐந்து (05) ஆண்டுகள் சிறந்த சேவை பதிவு ஒன்றை கொண்ட அதிகாரி ஒருவராக அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதியை பூர்த்தி செய்திருத்தல்.
2. நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் குறித்த துறையில் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

பல்நோக்கு பணிகளில் ஈடுபடும் குழுக்களுக்காக தலைமைத்துவத்தை வழங்குதல் மற்றும் மனித மற்றும் மற்ற வளங்களை செயல்திறனுடன் நிர்வகிப்பதில் தேர்ச்சியை பெற்றித்தல் வேண்டும்.

vi. வயது – 35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயர் வயதெல்லை பொருந்தாது.

vii. வீதி நிர்மாணத் துறையில் சேவை அனுபவத்திற்காக நேர்முகப் பரீட்சையில் முன்னுரிமை வழங்கப்படும்.

viii. ஆட்சேர்ப்பு முறை – கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்

தலைமை பொறியியலாளர் – பதவி 01

i. பதவியின் பெயர் – தலைமை பொறியியலாளர்

ii. மாதாந்த கொடுப்பனவு – MM 1 - 1 சம்பளப் பிரிவின் II தரத்தின் ஆரம்ப சம்பளப் படிக்கு தொடர்புடையவாறு முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இல் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 81,710/- மற்றும் முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2024 இற்கு அமைய வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 17,800/- ஆகும் வகையில் மாதாந்தம் ரூபா 99,510/- கொடுப்பனவு ஒன்று உரித்தாகும்.

iii. தகைமை

முகாமைத்துவ (MM) சேவைத் தரத்தின் பொறியியாளர் (சிவில்) மடத்தின் I ஆவது தர அதிகாரி ஒருவராக இருத்தல்

அத்துடன்

பொறியியல் துறைக்கு பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டய பொறியியலாளர் (சிவில்) ஒருவராக பதிவு செய்திருத்தல்.

iv. வயது – 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

v. வீதி நிர்மாண துறைக்குள் சேவை அனுபவத்திற்காக நேர்முகப்பரீட்சையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

vi. ஆட்சேர்ப்பு முறை – கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்

vii. நியமன பண்பு – ஒப்பந்த அடிப்படையில்

பொதுவான நிபந்தனைகள்

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கும், மத்திய மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
3. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குப் பொருத்தமான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.
5. அதிகாரசபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் மட்டுமே உள்ளக விண்ணப்பதாரர்களாகக் கருதப்படுவர்.
6. அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது சட்டரீதியான நிறுவனமொன்றில் பணியாற்றுபவராக இருப்பின், நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தைத் தயாரித்து அனுப்புவதுடன், தம்மைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.
8. நீங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என்பது ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவந்தால், தகுதியற்றவராகக் கருதப்பட்டு உங்களது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவந்தால், அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
9. வீதி நிர்மாணத் துறையில் பெற்ற சேவை அனுபவத்திற்கு நேர்முகப் பரீட்சையின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்று முன்கூட்டிய அனுமானத்தின் அடிப்படையில், உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர் அழைக்கப்படுவது, இந்தப் பதவிக்கு நியமனம் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக் குறிப்புகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன், உரிய சான்றிதழ்களின் பிரதிகளையும் (சான்றுறுதிப்படுத்தப்பட்டவை) இணைத்து அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு, 2026.12.04 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில், கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

2026.12.04 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், விண்ணப்பம் அடங்கிய கடித உறையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
இல. 09,
எஹெலேபொல குமாரிஹாமி மாவத்தை,
போகம்பர,
கண்டி.
தொலைபேசி இலக்கம்: 081-2204378

Gazette.lk
AMBITIONS REALIZED

பொது முகாமையாளர்
மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
மத்திய மாகாணம்